பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 26 | வியாழக்கிழமை | 09.05.2024 | அதிர்வு 282

## காலியில் ஒருவர் சுட்டுப் படுகொலை




காலி. அஹுங் கல்ல – போகஹாபிட் டிய பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரி ழந்துள்ளார் 06

# ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சட்டபூர்வமானதா? டயனா கமகே விவகாரத்தால் எழுந்தது சர்ச்சை

## சிறந்த சட்டத்தரணிகளைத் தயார்ப்படுத்துங்கள் என எதிரணியினருக்கு அமைச்சர் காஞ்சன ‘அட்வைஸ்’



“இலங்கைப் பிரஜை அல்லாத டயனா கமகேவி னால் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சட்டபூர்வமானதா? நாடாளுமன்றத் தேர்தலின்போது கட்சியின் வேட்புமனுவில் அவர் கையெழுத்திட்டிருந் தாலோ, தற்போதைய கட்சி செயலாளருடன் அவர் உடன்படிக்கையைச் செய்திருந்தாலோ அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 06




# தமிழர் விரும்பும் தலைவர் ரணிலே; தமிழ்ப் பொது வேட்பாளர் எதற்கு?

## வடக்கு அரசியல்வாதிகளிடம் ஐ.தே.க. கேள்வி



“தமிழ் மக்கள் விரும்புகின்ற தலை வராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடுகின்ற நிலை யில், தமிழ்ப் பொது வேட்பாளர் ஏன் வேண்டும்? இந்த விடயத்தில் வடக்கு தமிழ் அரசியல்வதிகள் ஏன் அதிக கவ னம் செலுத்துகின்றார்கள்.?”

- இவ்வாறு கேள்விக்கணைகளைத் தொடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சி யின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பி னருமான வஜிர அபேவர்த்தன. 06

# பாதாளக் குழுக்களைச் சேர்ந்த 11 பேர் ஒரே நாளில் சிக்கினர்

## கைது வேட்டை தொடர்கின்றது



பாதாள உலகக் குழுக்க ளின் செயற்பாடுகளைக் கட்டுப் படுத்துவதற்காக உருவாக் கப்பட்ட 20 குழுவினரால் நாட ளாவிய ரீதியில் மேற்கொள்ளப் பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஒரே நாளில் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், இந்தச் சுற்றி வளைப்பு 06



இலங்கைத் தமிழ ரசுக்கட்சிதொடர்பாகதிரு கோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நிலு வையில் உள்ள வழக்கு விவகாரத்தில் இலத்தி ரனியல் பத்திரிகை ஒன் றின் வெளியீட்டாளர் மீது நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருப்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அகிலன் முத்துக்குமாரசாமி என்ப வருக்கு எதிராக இந்த வழக்கின் எதிராளி களில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தில் இக்குற் றச்சாட்டை முன் வைத்திருந்தார்.

அதைப் பரிசீலனைக்கு ஏற்றுக் கொண்ட திருகோணமலை மாவட்ட நீதிமன்றம், சம்பந்தப்பட்டவருக்கு நீதிமன்றத்தில் முன் னிலையாக அழைப்பாணை 06



# ரயில்வே மறுசீரமைப்பு யோசனை அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும்

ரயில்வே திணைக்களத்தின் மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் அடுத்த மாதத்திற்குள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான பிரேரணையை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை தற்போது ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சின் அதிகாரிகள் குழுவினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

குழுவின் முன்மொழிவுகளை மீளாய்வு செய்து அமைச்சரவைக்கு சமர்பிப்பதற்கான பிரேரணையைத் தயாரிப்பதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவையின் தீர்மானத்தின் பின்னர் அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் ரஞ்சித் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

## சாரதிகள், நடத்துநர்கள் மோதல்: நான்கு பேர் வைத்தியசாலையில்



(ராமு தனராஜா)

பண்டாரவளை பிரதான பஸ் தரிப்பிடத்தில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மற்றும் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதி மற்றும் நடத்துநர் மற்றும் தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியதில் 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேர அட்டவணை தொடர்பாக நேற்றுமுன்தினம் ஏற்பட்ட வாக்குவாதமே மோதலாக மாறியது என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பண்டாரவளை தலைமையகப் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

## குமார வெல்கமவுக்கு 3 மாத கால விடுமுறை



களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவுக்கு 3 மாத விடுமுறை வழங்குவதற்கு நாடாளுமன்றில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

குமார வெல்கம சுகவீனமுற்றிருப்பதால் அவருக்கு விடுமுறை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்த நிலையிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு சம்பளத்துடன், 3 மாதம் விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# பாஸ்மதி அரிசிக்கு மாற்றீடாக 2 நெல் வகைகள் கண்டுபிடிப்பு

பாஸ்மதி அரிசிக்கு மாற்றீடாக இரண்டு மாற்று நெல் வகைகளை பத்தலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் கண்டறிந்துள்ளது.

ஏ.ரி 306 மற்றும் ஏ.ரி 309 ஆகிய இந்த நெல் வகைகள் பாஸ்மதி அரிசியைப் போன்று நீளமானவை என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது சுற்றுலா மற்றும் விருந்தகங்களின் பயன்பா- ட்டிற்காக மாத்திரம் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து பாஸ்மதி அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கையில் இனங்காணப்பட்ட இந்த 2 மாற்று நெல் இனங்களுக்கு பயிர் விநியோகக் குழுவின் பரிந்துரை வழங்கப்படவுள்ளது.

மேற்படி பரிந்துரையை அடுத்து எதிர்வரும் மாதங்களில் அவற்றை இலங்கையில் பயிரிடுவதற்காக விநியோகிக்க உள்ளதாக பத்தலகொட நெல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.




# சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்ததும் க.பொ.த. உயர்தர வகுப்புகள் தொடங்கும்

தற்போது நடைபெற்றுவரும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்த 2 வாரங்களுக்குள் அந்த மாணவர்களுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளோம் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காலத்தில் ஏற்பட்ட கல்விச் செயற்பாடுகளின் பின்னடைவைச் சீர்செய்யும் முகமாக இந்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்ததும் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளை 2 நிலைகளின் கீழ் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதற்காக 35 ஆயிரம் ஆசிரியர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# கடன் மறுசீரமைப்பு மூலம் இலங்கையின் கடன் சுமையை 17 பில்லியன் அமெரிக்க டொலர்களால் குறைக்க முடியும்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



“வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையை ஜூன் மாதத்திற்குள் நிறைவு செய்ய அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. முழுமையான கடன் மறுசீரமைப்புப் பணிகள் வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலம் இலங்கையின் கடன் சுமையை 17 பில்லியன் அமெரிக்க டொலர்களால் குறைக்க முடியும்.”

– இவ்வாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைப் பேணுவதுடன் அனைத்து நாடுகளுடனும் நல்ல உறவு முறையை இலங்கை பேணி வருகிறது. இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாத்து ஒவ்வொரு நாட்டுடனும் சிறப்பான தொடர்பு களைப் பேணுவது, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பதை எளிதாக்கியது.

சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பரிஸ் கிளப் ஆகியவை கடன் மறுசீரமைப்பிற்கு பெரும் ஆதரவை வழங்கின. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெற்ற பின்னர் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர முடியும்.

சீனாவுடனும் இந்தியாவுடனும் எமக்கு நெருங்கிய உறவை ஏற்படுத்த முடிந்துள்ளது. சீனாவுடன் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்தியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இலங்கையில் அதிகளவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுகிறார்கள். குறிப்பாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியில் முதலீடு செய்ய அதானி நிறுவனம் முன்வந்துள்ளது. மேலும் இலங்கையில் முதலீடுகள் செய்வது குறித்து சவுதி அரேபியாவும் கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் தங்களது எரிபொருள் சார்ந்த பொருளாதாரத்தை தாண்டி ஏனைய நாடுகளில் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி தங்கள் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றன. அதனை இலங்கைக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நாம் நடவடிக்கை எடுக்கின்றோம்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு சர்வதேச விதிகளுக்கு அமைய வெளிநாடுகளுடன் உறவுகளைப் பேணி வருவதால், ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு எவ்வித பிரச்சினையும் ஏற்பட வில்லை. ஈரான் வழங்கிய உமா ஓயா திட்டமானது அடுத்த மாதம் முதல் தேசிய மின்சார கட்டமைப்பில் 120 மெகாவொட் மின்சாரத்தை வழங்கும். இதன் மூலம் அடுத்த மாதம் மின் கட்டண திருத்தத்தின் போது இதன் பலன் மக்களுக்கு கிடைக்கும்.

இலங்கையை சுற்றுலா மையமாக மாற்ற வேண்டுமாயின், விசா கட்டணத்தில் கவனம் செலுத்தாமல், சுமார் ஐம்பது நாடுகளுக்கு இலவச விசா வழங்க வேண்டும். இதன் ஊடாக சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கலாம்.

கடந்த வாரம் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இலங்கையின் பொருளாதார சீர்திருத்த முன்னேற்றத்திற்கு ஜப்பான் ஆதரவளிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள ஜப்பான் அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் தொடங்க ஜப்பான் ஒப்புக் கொண்டுள்ளது.

தற்போது மியான்மாரில் உள்ள இளைஞர்களைக் காப்பாற்ற இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சட்டப்பூர்வமற்ற முறையில் ரஷ்யா – உக்ரைன் யுத்தம் சார்ந்த கூலிப்படைக்கு அனுப்பப்பட்டுள்ள நமது இளைஞர்களை காப்பாற்ற இராஜதந்திர ரீதியில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரஷ்யாவின் பாதுகாப்புப் படையினருடனும் இது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.” – என்றார்.

# பிங்கிரிய தொழில் வலயத்தின் அபிவிருத்தியை நிறைவு செய்க!

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு







பிங்கிரிய தொழில் வலயத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பிங்கிரிய தொழில் வலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் உட்பட ஏனைய கட்டுமானங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

மூன்று கட்டங்களில் கீழ் பிங்கிரிய தொழில் வலயத்தின் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், முதல்கட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் குறிப்பிடத்தக்க அளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பணிகளை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்யுமாறு பணிப்புரை விடுத்துள்ள ஜனாதிபதி, எதிர்வரும் ஜூன் மாதம் அந்த பணிகளை மேற்பார்வைச் செய்ய எதிர்பார்த்திருக்கின்றார் எனவும் தெரிவித்துள்ளார்.






# சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்திற்காக பொதுவான சட்டம் கொண்டு வரப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றத்திற்காக ஒரேயொரு பொதுச் சட்டம் கொண்டுவரப்படும். கடந்த சில நாள்களாக இலங்கை எதிர்நோக்கும் கடும் வெப்பமானது எதிர்கால காலநிலை மாற்றத்தின் அடையாளம்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று முன்தினம் ஆரம்பமான இலங்கை காலநிலை மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“காலநிலை மாற்றத்துக்கு எதிரான அரசின் நடவடிக்கை குறித்து வர்த்தக சமூகத்துடன் ஆராய்வதற்கான இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றது முதல், காலநிலை சவால்களை சமாளிக்கும் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து வருகிறேன். அதற்காக எனது அலுவலகத்தில் காலநிலை மாற்ற மையம் உருவாக்கப்பட்டு அதற்கான ஆலோசகரும் நியமிக்கப்பட்டார்.

இதுவரை சுற்றுச்சூழலில் மட்டுமே எங்கள் கவனம் இருந்தது. ஆனால் அதில் காலநிலை மாற்றம் வகிக்கும் முக்கிய பங்கை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காலநிலை மாற்றம் மோசமானால் முழு சுற்றுச்சூழலும் சீர்குலைந்துவிடும். எனவே, காலநிலை மாற்றத்தை எவ்வாறு மாற்றியமைப்பது மற்றும் காலநிலை மாற்றத்திற்கு எதிராக எவ்வாறு போராடுவது என்பதில் நாம் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த சில நாள்களில் நாம் எதிர்கொள்ள வேண்டிய கடுமையான வெப்பம் எதிர்கால காலநிலை மாற்றத்தின் அறிகுறியாகும். நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே ஜனாதிபதியாக எனது பணியாக இருந்தது. இதுவரை இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால் அடுத்தகட்ட பணிகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டின் தற்போதைய பொருளாதார முறைமையில் எம்மால் முன்னேற முடியாது. நான் முன்பு பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டமை போல், நாம் அதிக போட்டித்தன்மை கொண்ட ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். அதற்கான புதிய சட்டத்தையும் உருவாக்கி இருக்கிறோம். மேலும் பொருளாதார மாற்ற சட்டம் அடுத்த வாரம் வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கிறோம்.

2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையும் இலக்கை இலங்கை அடைவதையும் இந்த பொருளாதார மாற்றச் சட்டம் உறுதி செய்கிறது. மேலும் அந்த காலப்பகுதிக்கு முன்னர் இலங்கை இந்த இலக்கை அடைய முடியும் என்று நான் நம்புகிறேன்.

எனவே, இந்நாட்டில் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதில், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவது மட்டும் நோக்கமல்ல. நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையும் இலக்கை அடைவதை அடிப்படையாகக் கொண்ட பசுமைப் பொருளாதாரமாக மாற்றுவதிலும் கவனம் செலுத்தியுள்ளோம்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான புதிய சட்டத்தையும் நாங்கள் உருவாக்கி வருகிறோம். சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம் இரண்டையும் கையாளும் ஒரு சட்டத்தை கொண்டு வர முடிவு செய்துள்ளோம். இதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தொடர்ந்து செயற்படும் அதேவேளை , காலநிலை மாற்றத்திற்கான மன்றம் அதில் உள்ளடக்கும். இந்தச் சட்டத்தை உருவாக்குவதற்கு தற்போதுள்ள பிரித்தானிய காலநிலை மாற்றச் சட்டத்தைப் பின்பற்றுமாறு அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன். அத்துடன், காலநிலை மாற்றக் குழுவின் ஆலோசனையின் பேரில் செயற்படுவதும் நாடாளுமன்றத்தில் ஒழுங்குவிதிகளை சமர்ப்பிப்பதும் அரசாங்கத்தினதும் சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் பொறுப்பாகும் .

நிதி நிறுவனங்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமாக இருப்பதும் பிரித்தானிய காலநிலை மாற்ற சட்டத்தை பின்பற்ற ஒரு காரணம் எனலாம். எங்களிடம் உள்ள பல்வேறு மாற்றுவழிகளும், எங்கள் பசுமை நிதியியலும், நிச்சயமாக இங்கிலாந்து நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை என்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம். வர்த்தக சபை, பங்குச் சந்தை, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு அனைத்தும் அதற்கேற்ப இதனுடன் தொடர்புபடும்.

மேலும், இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான அதிக சாத்தியக்கூறுகள் உள்ளன. சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்திற்கான இலங்கையின் கொள்ளளவு 30 – 50 ஜிகாவோட் வரையில் காணப்படுகிறது. எங்களிடம் உள்ள இந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை பயன்படுத்தி பெரும் பயனை அடைய எதிர்பார்த்திருக்கிறோம்.

மேலும், நாட்டில் விவசாயப் பொருளாதாரத்தை உருவாக்கும் வகையில், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்வது என்பது இந்த உடன்பாட்டை உலகளாவிய சமூகத்தினால் எட்ட முடியாமல் போயிருக்கிறது. காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் இலங்கையும் பங்கேற்றது. அங்கு நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடந்தாலும் இறுதி உடன்பாடு எட்ட முடியவில்லை. அடுத்த இரண்டு சந்திப்புகளில் நாம் ஏதாவது ஒரு உடன்பாட்டுக்கு வர வேண்டும் அல்லது இதை கைவிட வேண்டும்.

ஆனால் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான மூன்று அடிப்படை நடவடிக்கைகளை இலங்கை மட்டுமே எடுத்துள்ளது. கடன் மறுசீரமைப்புக்கு ஆபிரிக்க நாடுகளுக்கு உதவ வேண்டும். கடன் நெருக்கடியில் இருந்து மீள ஆபிரிக்க நாடுகளுக்கு நிதி தேவைப்படுகிறது. இல்லையேல் அந்த கண்டத்தில் அழிவு ஏற்படும். நாங்கள் எங்கள் கடனை வெற்றிகரமாக மறுசீரமைத்துள்ளோம். மிகச் சிரமப்பட்டு அதை செய்திருக்கிறோம். அந்த சவாலை எதிர்கொள்ளும் திறன் இலங்கைக்கு இருந்தது. ஆனால் அதற்கு ஆதரவு தேவைப்படுபவர்களும் இருக்கிறார்கள். ” – என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடுப்பதற்கு முதல் தவணையில் பணித்திருந்தது.

அப்படி தமக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டமை பற்றிய செய்தியை தமது படத்துடன் தமது வெளியீடான பத்திரிகையில் முன் பக்கத்தில் பிரசுரித்த அவர், குறிப்பிட்ட வழக்குத் தவணையில் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. நீதிமன்ற அழைப்பாணை ஏதும் தமது கட்சிக்காரருக்குக் கிடைக்கவில்லை என்று அவர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

எனினும் அழைப்பாணை நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட செய்தியை தமது பத்திரிகையில் இடம் பெறச் செய்தவர், நீதிமன்றம் விடுத்த அழைப்பாணை கிடைக்காமையால் மன்றுக்கு சமுகம் தரவில்லை என்ற காரணத்தைக் கூறித் தப்ப முடியாது, அதை ஏற்கக் கூடாது என வழக்கின் எதிராளியான சுமந்திரன் வைத்த வாதத்தை நீதிமன்றம் ஏற்றது. சம்பந்தப்பட்டவருக்கு எதிராக பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்தது. இது பற்றிய விடயங்கள் வாசகர்களுக்கு தெரிந்தவைதான்.

தமக்கு எதிராக நீதிமன்றம் பிடிவிறாந்து அல்லது பிடியாணை விடுத்திருப்பது தமக்கான ஒரு சாதனை போல தமது இலத்திரனியல் பத்திரிகையில் முதல் பக்கத்தில் செய்தியாகப் பிரசுரித்த அவர் இப்போது வெளிநாடு பறந்து விட்டார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

அவரைக் கைது செய்வதற்கான நீதிமன்றத்தின் பிடிவிறாந்து உத்தரவு சாவகச்சேரி நீதிமன்றத்தின் பதிவாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிகின்றது. அந்த உத்தரவு இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

தமக்கு எதிராகப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருப்பதை தமது பத்திரிகையில் பிரசுரித்த பின்னரே அவர் நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றார் என்றும் தெரிகின்றது. கட்டுநாயக்கா விமான நிலைய பதிவுகளும் அதனை உறுதிப்படுத்தும்.

அடுத்த 31ஆம் திகதி வழக்கின் தவணை. அதற்கு முன்னர் நாடு திரும்பி, சாவகச்சேரி நீதிமன்றில் நீதிமன்ற பதிவாளர் வசம் ஒப்படைக்கப்பட்ட பிடிவிறாந்து தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அவர் ஒத்துழைக்க வேண்டும்.

தவறுவாரேயானால் இனி நாட்டுக்குள் நுழையும் போது விமான நிலையத்தில் வைத்தே அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் உத்தரவை நீதிமன்றம் அடுத்த தவணையின் போது விடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்பதுதான் நிலைமை.

## தமிழர் விரும்பும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் கருத்துரைக்கும்போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நடக்கக்கூடிய விடயங்கள் தொடர்பில் வடக்கு தமிழ் அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும். அதைவிடுத்து மக்கள் விரும்பாத - சாத்தியம் இல்லாத விடயங்கள் தொடர்பில் பேசி காலத்தை வீணடிக்கக்கூடாது. அந்தவகையில், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயமும் தேவையற்ற ஒன்று.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் வடக்கு தமிழ் அரசியல்வாதிகள் என்ன தீர்மானம் எடுத்தாலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தமிழ் மக்கள் ஆதரவு வழங்குவார்கள்." - என்றார்.

# மருதானையில் ரயில் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் பலி

ரயிலில் மோதி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மருதானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் மருதானை ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத் தகராறு காரணமாக அவர் ரயில் முன் பாய்ந்து உயிரை மாய்த்திருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐக்கிய மக்கள் சக்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். எனவே, சிறந்த சட்டத்தரணிகளை எதிரணியினர் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்."

- இவ்வாறு மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பைச் சவாலுக்குட்படுத்தப் போவதில்லை. ஆனால், தற்போது புதிய பிரச்சினையொன்று எழுந்துள்ளது. டயனா கமகே இலங்கைப் பிரஜாவுரிமை அற்றவர் என்பதால் அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது. இங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமைக்கு அவரே கைச்சாத்திட்டுள்ளார்.

ஆகவே, ஐக்கிய மக்கள் சக்தி சட்டபூர்வமானதா? என்ற பிரச்சினை எழும். அவரே கட்சியை இவர்களிடம் கொடுத்துள்ளார். அவர் அந்தக் கட்சியைப் பதிவு செய்யும்போது அவர் இலங்கைப் பிரஜையாக இல்லாமலே இருந்துள்ளார். இந்த நாட்டைச் சேர்ந்தவர் அல்லாத ஒருவருக்குக் கட்சியைப் பதிவு செய்ய முடியாது.

அத்துடன் 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தேர்தலில்போட்டியிடவேட்புமனுவிலும் அவரா கையெழுத்திட்டார் என்பதும் தெரியாது. அப்படி அவர் கையெழுத்திட்டிருந்தால் அது தொடர்பாகக் கவனம் செலுத்தலாம். எதிரணியின் உறுப்பினர்கள் பலர் நாடாளுமன்ற உணவகத்தில் கதைக்கும்போது மிகவும் குழப்பத்தில் இருப்பது போன்றே இருந்தது." - என்றார்.

இதன்போது எழுந்த ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.,

"கட்சி பதவிகள் ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதில் பிரச்சினைகள் கிடையாது." - என்றார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் உரையாற்றிய அமைச்சர் காஞ்சன விஜேசேகர,

"அப்படியில்லை, இப்படி இல்லை என்று கூறினாலும் இது நீதிமன்றம் செல்லும் பிரச்சினையாகும். நீதிமன்றத்தில் அது தொடர்பில் கூற வேண்டி வரும்.

வேட்பு மனுக்களில் யார் கையெழுத்திட்டது என்றும் பரிசோதிக்க வேண்டி வரும்.

இதனால் விவாதங்களுக்கு நேரத்தைச் செலவிடுவதை விடுத்து, இந்த விடயத்துக்கு முகம்கொடுப்பதற்குத் தயாராகுங்கள்.

உங்களுக்கு இந்த விடயத்தில் ஏதோவொரு பிரச்சினை உள்ளது. அவ்வாறு நடக்கக்கூடாது என்றே பிரார்த்திக்கின்றேன்." - என்றார்.

## காலியில் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கீர்த்தி சேனா அப்ரூ என்ற 56 வயதுடைய குடும்பஸ்தரே சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

அவர் தனது வீட்டில் இருந்தபோதே இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று இரவு 7.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தலையில் பலத்த காயமடைந்த குடும்பஸ்தர், பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இது வரை வெளியாகவில்லை என்பதுடன் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## பாதாளக் குழுக்களைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கையின்போது பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணினர் என்று கூறப்படும் மேலும் 16 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் முல்லேரியா, மல்வானை, கடுவலை மற்றும் உடுகம்பொல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 57, 39, 25, 23 மற்றும் 35 வயதுடைய ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பலப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 71 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொழும்பு 10, கொழும்பு 14, கொழும்பு 13, கொழும்பு 10 மற்றும் கொழும்பு 12 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 44, 21, 30, 20 மற்றும் 33 வயதுடைய ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இதுவரை பாதாள உலகக் குற்றக் குழுக்களைச் சேர்ந்த 913 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


INDSRI FERRY
யாழ்
↕
நாகை
13/05/24
இல் இருந்து தினசரி
"சிவகங்கை" பயணிகள் கப்பல்
சேவை
துட்டு இருந்தால் வாங்கலாம் பட்டு
• சேலை துணிமணிகள் வாங்க
• சமயச் சுற்றுலாக்கள்
• அழகிய கடற்கரைகள்
மேலும் அனுபவிக்க ...
ரூ 15,000*
இல் இருந்து
www.sailindsri.com
பதிவுகளுக்கு
Google play
Download on the App Store
*ஒரு வழிக் கட்டணம் (வரிகள் இன்றி )

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தீர்ப்புக்குள் தீர்ப்பு

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அந்தப் பதவியை இழப்பது என்பது புதிய விடயமேயல்ல. முன்னரும் நடந்தவைதான். அதுவும் இலங்கைப் பிரஜாவுரிமை விவகாரத்தில் எம்.பி. பதவியை நேற்று டயானா கமகே இழந்தமையைப் போன்று முன்னரும் ஒரு வழக்கில் - அதுவும் ஒரு பெண் உறுப்பினர் - கீதா குமாரசிங்க எம்.பி. பதவியை இழந்திருக்கிறார்.

ஆனால் டயானா கமகே வழக்கில் உயர் நீதிமன்றம் நேற்றுத் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டிய விடயங்கள் மிகவும் முக்கியமானவை. இலங்கையில் சட்டம், நீதி போன்றவற்றின் நடைமுறையாக்கம் தொடர்பில் இந்தத் தீர்ப்பு சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் முக்கிய கவனிப்புக்குரியவை.

பிரிட்டிஷ் பாஸ்போர்ட்டுடன் இலங்கைக்கு வந்த டயானா கமகே இங்கு தன்னை தம்பாட்டிலேயே இலங்கைப் பிரஜையாகப் பிரகடனப்படுத்தி, இலங்கை பாஸ்போர்ட் ஒன்றைப் பெற்றுருக்கின்றார். அதை பின்னர் இராஜதந்திர பாஸ்போர்ட்டாகவும் மாற்றியிருக்கின்றார்.

பிரிட்டிஷ் பாஸ்போர்ட் பெற்றமையுடன் இலங்கைப் பிரஜாவுரிமையை இழந்த டயானா கமகே, அதற்குப் பின்னர் இலங்கை பாஸ்போர்ட்டைப் பெற்றமை தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தித்தான் என்பதை நிரூபித்துள்ளது என உயர் நீதிமன்றம் நேற்று தன் தீர்ப்பில் சுட்டிக்காட்டி உள்ளது.

டயானாகமகேயின்நாடாளுமன்றஉறுப்புரிமையை நீக்கும்படி கோரி, முதலில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அந்த நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டிலேயே நேற்று டயானா கமகேயின் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பறித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கின்றது.

நேற்றைய தீர்ப்பில் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ள இரண்டு விடயங்கள் மிக முக்கியமானவை.

முதலாவது - டயானா கமகே இலங்கைப் பாஸ்போர்ட் பெற்றமை தொடர்பான விசாரணையில் டயானா கமகேயைக் கைது செய்து நடவடிக்கை எடுப்பதற்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு போதிய காரணங்கள் இருந்தும், அதை சி.ஐ.டி. செய்யாதமையை உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் காட்டமாக விமர்சித்திருக்கின்றது.

அடுத்தது - மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தீர்ப்பு குறித்த உயர்நீதி மன்றத்தின் கடும் விமர்சனம்.

இந்த வழக்கில் சில ஆவணங்களின் மூல அல்லது அசல் பிரதிகள் சமர்ப்பிக்கப்படாமையை வழக்கை நிராகரிப்பதற்கான ஒரு காரணமாக மேன்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டமையை உயர்நீதிமன்றம் பெரும் குறையாகச் சுட்டிக்காட்டி உள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் தீர்ப்பு வாசகங்களை ஆராயும் போது, பிரதிவாதியான டயானா கமகேயின் மூல சமர்ப்பணத்தில் பெரும்பாலான பகுதிகளை அப்படியே நகலெடுத்து தீர்ப்பில் அவற்றை வரிசைக்கிரமமாக ஒட்டி இருப்பது அப்பட்டமாகத் தெரிகின்றது, இப்படி சுமார் எண்பது இடங்களில் டயானா கமகே தரப்பு சமர்ப்பணங்கள் கத்திரித்து எடுக்கப்பட்டு, தீர்ப்பு வாசகங்களில் சேர்க்கப்பட்டுள்ளன, அதற்கு அப்பால் குறைந்த எண்ணிக்கையான பந்திகளே புதிதாக தீர்ப்பில் இடம்பெற்றுள்ளன என்று உயர் நீதிமன்றம் தனது நேற்றைய தீர்ப்பில் விமர்சித்திருக்கின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசரை, உயர்நீதிமன்ற நீதியரசராகப் பதவி உயர்த்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய பரிந்துரை, சம்பந்தப்பட்ட நீதியரசரின் செயற்பாடு சம்பந்தமான வினைத்திறனின் அடிப்படையில் அரசமைப்புக் கவுன்ஸிலினால் நிராகரிக்கப்பட்டமையின் பின்னணியில், அந்த விவகாரம் உயர் நீதிமன்ற விசாரணையில் இப்போது நிலுவையில் உள்ளது.

அந்தப் பின்புலத்தில்தான் இப்படி எதிராளி டயானா கமகேயின் சமர்ப்பணங்களை அப்படியே ஆங்காங்கே கத்தரித்து ஒட்டி, மேன்முறையீட்டு நீதி மன்றம் அதனைத் தீர்ப்பாக வழங்கியிருக்கின்றது என உயர்நீதிமன்றம் குறை கூறியிருப்பதை நோக்க வேண்டியுள்ளது.

இந்தத் தீர்ப்புக்குள் ஒரு தீர்ப்பு புதைந்து கிடைக்கின்றது என்பதுதான் இதில் விவகாரம் ஆகும்.




# ஏர் இந்தியா ஊழியர்கள் திடீர் வேலை நிறுத்தம்

## விமான சேவை பாதிப்பு




ஏர் இந்தியா ஊழியர்களின் திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தால் இந்தியா முழுவதும் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

முன்னறிவிப்பின்றி ஏர் இந்தியா விமான சேவைகள் நேற்று இரத்து செய்யப்பட்டுள்ளன என பயணிகள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இதனால், பெங்களூர் – டில்லி, கோழிக்கோடு– டுபாய் குவைத்– தோகா விமானங்களும், திருவனந்தபுரம், கொச்சி, கண்ணூரில் இருந்து இயக்கப்படும் ஏர் இந்தியா விமானங்களும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக ஏர் இந்தியா கண்ணூரில் இருந்து தனது விமானங்களை இரத்து செய்தது. அதன்படி, கண்ணூரில் இருந்து மூன்று விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

கொச்சி விமான நிலையத்திலிருந்து நான்கு சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும், திருவனந்தபுரம் உட்பட இந்தியா முழுவதும் உள்ள பல விமான நிலையங்களில் இருந்து சுமார் 70 விமானங்களின் சேவைகள் ரத்து செய்யப்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானங்கள் இயக்கச் சிக்கல்கள் காரணமாக ரத்து செய்யப்பட்டதாகத் தெரிவித்தாலும், அதன் ஊழியர்களின் வேலைநிறுத்தம் தான் இரத்து செய்ய வழிவகுத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆபிரிக்கர்களைப் போலவே தென்னிந்தியர் இருக்கின்றனர்

## காங்கிரஸ் மூத்த தலைவர் சர்ச்சைக் கருத்து



கிழக்கில் உள்ள இந்தியர்கள் சீனர்களைப் போலவும், தென்னிந்தியர்கள் ஆபிரிக்கர்களைப் போலவும் இருக்கின்றனர் என காங்கிரஸ் மூத்த தலைவர் சேம் பிட்ரோடா கூறிய கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட காங்கிரஸின் சர்வதேச தலைவரான சேம் பிட்ரோடா, இந்தியாவைப் போன்ற ஒரு பன்முகத்தன்மை கொண்ட நாட்டை நாம் ஒன்றாக வைத்திருக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கில் உள்ளவர்கள் சீனர்களைப் போலவும், மேற்கில் உள்ளவர்கள் அரேபியர்களைப் போலவும், வடக்கில் உள்ளவர்கள் வெள்ளையர்களைப் போலவும், தென்னிந்தியாவில் உள்ளவர்கள் ஆபிரிக்கர்களைப் போலவும் தோற்றமளிக்கிறார்கள்.

அத்துடன், மக்கள் பல்வேறு மொழிகள் பழக்கவழுங்கங்கள் மற்றும் உணவுகளை மதிக்கின்றனர் இந்தநிலையில் அனைவரையும் ஒன்றிணைத்து இந்தியாவை பன்முக நாடாக வைத்திருக்கமுடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவர் திசைகளை கோடிட்டு இந்தியர்களை வேறு நாட்டவர்களுக்கு ஒப்பிட்டமையை ஆளும் பாரதீய ஜனதா கண்டித்துள்ளது.

அதேநேரம் அவரின் கருத்து தமது கட்சியின் நிலைப்பாடல்ல என்று காங்கிரஸின் செயலாளர் ஜெய்ராம் ரமேஸ் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக அமெரிக்காவில் இன்னும் நடைமுறையில் இருக்கும் பரம்பரை சொத்துக்கான வரியை இந்தியாவிலும் நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்று பிட்டோரா கூறியிருந்தமையும் சர்ச்சையாக கருதி விமர்ச்சிக்கப்பட்டது.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் வெளிநாடு வாழ் இந்தியர்கள் பிரிவுத் தலைவர் பதவியில் இருந்து சேம் பிட்ரோடா இராஜினாமா செய்ய முடிவெடுத்துள்ளார் என அக்கட்சியின் ஊடக பிரிவு செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பிட்ரோடாவின் முடிவை கட்சித் தலைவர் கார்கே ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும் இந்த முடிவு அவரின் சொந்த விருப்பத்தின் பேரில் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




# காசாவின் முக்கிய எல்லையை மீண்டும் திறந்துள்ள இஸ்ரேல்



காசா போர் சர்வதேச ரீதியில் பதற்றத்தை அதிகரித்துள்ள நிலையில் முக்கிய எல்லை பகுதியை இஸ்ரேல் மீண்டும் திறந்துள்ளது.

கடந்த வார இறுதியில் காசாவின் முக்கிய எல்லை பகிடியான கெரெம் ஷாலோமை இலக்கு வைத்து ஹமாஸ் வான்வழி தாக்குதல் நடத்தியிருந்தது.

இந்த தாக்குதலில் 4 இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டனர். இதன் காரணமாக கெரெம் ஷாலோம் எல்லையை இஸ்ரேல் அதிரடியாக மூடியது.

காசாவுக்குள் மனிதாபிமான உதவிகள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதோடு ஐ.நா. மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கவலை தெரிவித்தன.

இந்த நிலையில் கெரெம் ஷாலோம் எல்லை பகுதியை இஸ்ரேல் மீண்டும் திறந்துள்ளது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் 8 மாதங்களாக தொடர்ந்து வருகிறது. போரில் காசா நகரம் பாதிப்படைந்துள் ளதோடு இலட்சக்கணக்கான மக்கள் உணவு, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்காக உலக நாடுகள் மனிதாபிமான உதவிகளை வாரி வழங்கி வருகின்றன.

எனினும் காசாவுக்குள் நுழைவதற்கு இஸ்ரேல் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையினால் மனிதாபிமான உதவிகளில் பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

# பிரேசிலில் வெள்ளப் பெருக்கு: அதிகரிக்கும் பலி எண்ணிக்கை






பிரேசிலில் உள்ள கிராண்டே டோ சுல் மாகாணத்தில் பெய்து வரும் கன மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக உயிரிழப்போரின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது.

இந்த மாகாணத்தில் பலத்த காற்று வீசியதால் ஏராளமான மின்கம்பங்கள் மற்றும் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் மூன்றரை லட்சம் பேர் இருளில் மூழ்கி தவிக்கின்றனர்.

அத்தோடு, சுமார்132 பேர் வரையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மாயமாகியுள்ளனர் என அந்நாட்டு சிவில் பாதுகாப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், வெள்ளம் காரணமாக மாயமான வர்களை மீட்பதற்கான பணிகளில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர் என கூறப்படுகிறது.

மேலும் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.







# விவசாயத்துறையை விருத்தி செய்து மேம்படுத்தாமல் கிராமியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியாது

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யாமல் கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியாது. எனவே அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் உட்பட கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஆரம்பிக்கும் அனைத்து வேலைத் திட்டங்களையும் வெற்றியடையச் செய்வதற்கு கிராமிய ரீதியாக செயற்படும் அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பு அவசியமானது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2100 புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2023 டிசம்பர் 2 ஆம் திகதி பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கிராம உத்தியோகஸ்தர்களுக்கான பரீட்சை முடிவுகளின்படி, பிரதேச செயலக மட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற 2100 விண்ணப்பதாரர்களுக்கு கிராம உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

அடையாளமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில் –

”வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். நாங்கள் ஏற்கனவே சர்வதேச நாணயநிதியத்துடன்ஓர்உடன்பாட்டைஎட்டியுள்ளமையோடுஅதிலுள்ள பல நிபந்தனைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போதைய அபிவிருத்தித் திட்டம் கிராமத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் வெற்றிகரமான அறுவடையைப் பெற முடிந்தது. மேலும், 2023ஆம் ஆண்டின் பெரும் போகத்தில், மீண்டும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றோம். இந்த பங்களிப்பின் காரணமாக இன்று நாம் பொருளாதார ரீதியில் வலுவடைந்துள்ளோம்.

இதன் மூலம் இன்று 2,100 கிராம உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள முடிந்தது. நிர்வாகப் பணிகள் மட்டுமின்றி, கிராமப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் பொறுப்பும் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து செயற்பட வேண்டிய 04 பிரிவுகளை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் அஸ்வெசும திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. சமுர்த்தியை விட மூன்று மடங்கு அதிக கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த பயனாளிகள் குறித்த தகவல்களை கணினிமயமாக்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும். அதற்கமைய, அடுத்த ஆண்டு முதல் இந்த திட்டத்தை எளிதாக செயல்படுத்த முடியும். அதன்படி, கிராமத்திற்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை அதிகரித்து, பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடிவு செய்துள்ளோம்.

அத்துடன், இந்த மக்களின் வாழ்வாதார வழிகளை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த வருவாய் கிராமத்தின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும். மேலும், கடந்த புத்தாண்டு காலத்தில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு இரண்டு மாதங்களுக்கு 10 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தோம். இது இம்மக்களுக்கு மேலும் நிவாரணத்தை அளிப்பதுடன், சிறு அரிசி ஆலை உரிமையாளர்களிடம் இருந்து இந்த அரிசி கொள்வனவு செய்யப்பட்டதால் அவர்களுக்கும் ஓரளவு நன்மை கிடைத்துள்ளது. கிராமத்தின் வளர்ச்சிக்காக இந்தப் பணி தொடர வேண்டும்.

அத்துடன், மக்களுக்கு இலவச காணி உரிமை வழங்கும் திட்டத்தையும் ஆரம்பித்துள்ளோம். இந்த காணி உரிமையால், அவர்களின் பொருளாதாரத்தில் பாரிய மாற்றம் ஏற்படும்.

மேலும், விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் கிராமப் பொருளாதாரம் வலுப்பெறுகிறது. முற்காலத்தில் ரஜரட்ட பிரதேசத்தில் விவசாயம் செழிப்பாக இருந்தது. தம்பதெனிய முதல் கண்டி வரையிலான ஈரப்பதம் உள்ள பிரதேசத்தில் கறுவா உள்ளிட்ட வாசனைப் பொருள்கள் பயிரிடப்பட்டு ஏற்றுமதி பொருளாதாரம் காணப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின் போது தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு என்பன ஏற்றுமதி செய்யப்பட்டன.

நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் அபிவிருத்தி செய்ய விவசாயத் துறையை மேம்படுத்த வேண்டும். எனவே இப்பணிகளை பிரதேச செயலக மட்டத்தில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கமநல சேவை மையங்கள் மட்டத்தில் விவசாய நவீனமயமாக்கல் குழுக்களை நியமித்து விவசாயிகளை திரட்டி தனியார் பங்களிப்புடன் கிராமிய விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை தற்போது தொடங்கியுள்ளோம். இதற்காக 25 பிரதேச செயலகங்கள் அடையாளம் காணப்பட்டு ஒவ்வொன்றிற்கும் 25 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்திற்குள் இதற்காகப் பயன்படுத்தப்படும் பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை 100 ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமிய விவசாயத்தை மேம்படுத்தாமல் கிராமத்தின் வறுமையை ஒழிக்க முடியாது. எனவே விவசாயத்தை நவீனமயமாக்கும் திட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். தெற்கில் சில பகுதிகள் சுற்றுலாத்துறையால் வளர்ச்சியடைந்துள்ளன. இந்த திட்டங்கள் அனைத்தும் கிராமத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. உங்கள் பிரதேசத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த நீங்கள் அனைவரும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

மேலும், கிராமப்புறக் கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். அதற்கு உங்கள் பங்களிப்பும் அவசியம்.

உறுமய வேலைத் திட்டம் தொடர்பான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் பணியை வினைத்திறனாக்கும் வகையில், பிரதமருடன் கலந்துரையாடி நடமாடும் சேவையை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். இதன்படி எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள்இந்தகாணிஉறுதிப்பத்திரங்களைவழங்கும்நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கிறோம்.” – என்றார்.







# வைத்திய அதிகாரிகளுக்கும் தாதியர்களுக்கும் முதுமையில் ‘மருத்துவமும் கவனிப்பும்’ பயிற்சி!

## கிளிநொச்சியில் திங்களும் செவ்வாயும் நடந்தது

(வாஸ் கூஞ்ஞ)

“கௌரவத்துடன் முதியோருக்கான சமூகம்சார் உட்படுத்தல் அபிவிருத்தி” செயற்பாட்டின் ஊடாக வைத்திய அதிகாரிகளுக்கும் தாதியருக்கும் “முதுமையில் மருத்துவமும் கவனிப்பும்“ எனும் தொனிப் பொருளின் கீழ் இரண்டு நாள்கள் (கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும்) இருபத்தைந்து பேருக்கு வதிவிடப் பயிற்சியுடனான கருத்தரங்கு யாழ். பல்கலைகழகத்தின் மருத்துவப் பீடத்தினால் கிளிநொச்சியில் நடத்தப்பட்டது.

இலங்கையில் முதல் முறையாக அரச வைத்தியர்களுக்கும் தாதியர்களுக்கும் முதியோர் மருத்துவம் தொடர்பாக இலங்கையின் பல்கலைகழகத்தினால் வழங்கப்படும் முதலாவது பாட நெறியாக இது கருதப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைகழகத்தின் மருத்துவப் பீடமும் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடமும் இணைந்து பயிற்சி வழங்குவதற்கான பாடவிதான பயிற்சிக் கையேடுகளை தயாரித்து, பி.எம்.சற். நிறுவனத்தின் அனுசரணையுடனும் சீ.பி.எம். மற்றும் மெதடிஸ்த திருச்சபை டெப்லிங் நிறுவனங்களின் கலந்துரையாடல்களின் அடிப்படையிலும் இது வழங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியை யாழ் பல்கலைக் கழகம் மருத்துவப் பீட வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமாரன், யாழ் பல்கலைக்கழக மனோத்துவவியலாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன், யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களான வைத்திய கலாநிதி பி.ஏ.டீ. கூஞ்ஞ , யாழ் பல்கலைக்கழகம் விரிவிரையாளர் வைத்திய கலாநிதி பிரபு நடராஜா ஆகியோர் வளவாளராக ஈடுபட்டனர்.

மெதடிஸ்த திருச்சபை டெப்லிங் நிறுவனத்தினால் ஜேர்மன் அரசின் பி.எம்.சற். நிதியுதவியின் கீழ் கிறிஸ்ரியன் பிளைன்ட் மிசன் (சீ.பி.எம்.) அனுசரையுடன் 2022 ஆம் ஆண்டு தொடக்கம் மன்னார் மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் “கௌரவத்துடன் முதியோருக்கான சமூகம்சார் உட்படுத்தல் அபிவிருத்தி” செயற்பாட்டின் திட்டத்தின் ஒன்றாகவே இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இறுதி நாளில் சான்றிதழ் வழங்கும் பைவத்தில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டீ.வினோதரன்,மெதடிஸ்த திருச்சபை “டெப்லிங்“ இயக்குனர் அருட்பணி ஜி.அன்ரனி சதீஸ், “டெப்லிங்“ மன்னார் மற்றும் அனுராதபுரம் திட்ட இணைப்பாளர் செல்வி.ஜெ.ஜெயபியூலா, மன்னார் மாவட்ட இணைப்பாளர் திரு நீக்லஸ் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.











# மன்னார் தீவில் அதானி நிறுவனத்தின் 52 காற்றாலைகள் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு பிரஜைகள் குழு எதிர்ப்பு!

## குழுத் தலைவர் மாக்கஸ் அடிகளார் நேற்றுத் தகவல்

( வாஸ் கூஞ்ஞ, எஸ்.றொசேரியன் லெம்பேட்)

பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் தொடர்ந்து மன்னார் தீவில் காற்றாலை உயர் மின் திட்டத்துக்கு இலங்கை அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ளாத நிலையில் நாங்கள் தொடர்ந்து போராடுவோம் என மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார் ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார்.

மன்னார் தீவில் ஏற்கனவே காற்றாலை மின் உற்பத்திக்கான நடவடிக்கையால் மன்னார் தீவு மக்கள் சொல்லொண்ணா துன்பத்திற்கு உள்ளாகிய நிலையில் இதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் இப்பகுதி மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு இருக்க தொடர்ந்து மன்னார் தீவில் 52 காற்றாலை உயர் மின் திட்டத்துக்காக அதானி நிறுவனத்துக்கு அங்கீகாரம் இலங்கை அமைச்சரவையினால் வழங்கப்பட்டிருக்கின்றமையை மன்னார் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாது.

இதற்கு எதிராக தொடர்ந்து மக்கள் போராட்டம் இடம்பெறும் என நேற்றுப் புதன்கிழமை மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார் கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

மன்னார் தீவில் காற்றாலையால் எமக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளை பல



முறை தெளிவுப்படுத்தியுள்ளோம். அப்படியிருந்தும் தற்பொழுது அதானி நிறுவனத்துக்கு 52 காற்றாலைகள் நிறுவ அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல தடவை நாங்கள் இம்மக்களின் அழிவு தொடர்பாக சுட்டிக்காட்டியும் அமைச்சரவை இந்த முடிவை எடுத்திருப்பது வேதனையை உண்டுபண்ணியுள்ளது. எமது வாழ்விடம் திட்டமிட்டு பறிக்கப்படுகிறது.

எமது பண்பாடு மற்றும் வரலாற்றுச் சுவடுகள் யாவும் அழிக்கப்படப் போகின்றன. மக்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு, மக்கள் வாழ முடியாத நிலைக்கு தொடர்ந்து தள்ளப்படப் போகின்றனர்.

எமது எதிர்கால சந்ததியினரான மாணவர்களின் கல்வி மற்றும் அவர்களின் எதிர்கால நல வாழ்வும் பாதிக்கப்படும் அபாய நிலை தோன்றப் போகின்றது.

மன்எனார் தீவின் மக்களின் வாழ்வாதாரம், வளமான மண் போன்றவைகள் தொடர்ந்து அழிவு நிலைக்கு தள்ளப்படாதிருக்க எமது மக்களை ஒன்றுத் திரட்டி பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

அத்துடன் இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று அவரது முடிவை நாங்கள் எதிர்பார்க்க உள்ளோம்.

மன்னார் தீவில் உள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி தகுந்த தீர்வை வழங்குவாராக இருந்தால் நாங்கள் மேற்கொள்ள இருக்கும் எதிர்ப்பு போராட்டங்கள் கைவிடப்படும்.

மன்னார் தீவில் இருந்து ஒரு துண்டு நிலத்தை கூட நாங்கள் இத் திட்டங்களுக்கு வழங்க மாட்டோம் . எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது விட்டால் எமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

மேலும் கனியவள மணல் அகழ்வினால் எமது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

மக்களுக்கு போதிய விளக்கம் இன்மையினால் மக்களிடம் இருந்து திட்டமிட்ட வகையில் காணிகள் அபகரிக்கப் படுகின்றன.

மேலும் சுமார் 500 ஏக்கர் வரையிலான காணிகளில் கனியவள மணல் அகழ்வுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

எனவே இது குறித்த திட்டங்களையும் நாங்கள் முற்று முழுதாக எதிர்க்கின்றோம்.– என மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி மாக்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

# பிஜியின் உயர்நீதிமன்றின் நீதியரசராக இலங்கை இறக்காமம் அஷ்ஹர் நியமனம்

( வி.ரி.சகாதேவராஜா)

பிஜியின் உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக இலங்கையின் இறக்காமத்தைச் சேர்ந்த மொகமட் அஷ்ஹர் உமர்லெப்பை நீதிபதி மாநில மாளிகையில் பதவியேற்றார்.

பிஜியின் நீதித்துறை மாநில மாளிகையில் உயர் நீதிமன்றத்தின் தலைமைப் பதில் நீதியரசர் மொஹமட் அஸ்ஹர் உமருலெப்பேயின் பதவியேற்பு விழா நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

பிஜி குடியரசுத் தலைவர் ரது வில்லியம் கட்டோனிவேரினால் உயர் நீதிமன்றத்தின் தற்காலிக நீதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

அவர், தற்காலிக தலைமை நீதியரசர் சலேசி டெமோ மற்றும் தலைமைப் பதிவாளர் டோமாசி பைனிவாலு முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நியமனத்திற்கு முன்னர், நீதியரசர் மொஹமட் அஸ்ஹர் உமர் லெப்பை, 2009 முதல் ஏப்ரல் 2014 வரை இலங்கையின் பல்வேறு நீதிமன்றங்களில் நீதிவான் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றினார்.

ஏப்ரல் 2014 இல் நாடியில் ரெசிடென்ட் மாஜிஸ்திரேட்டாகத் தொடங்கிய அவர், ஏப்ரல் 2017 முதல் லௌடோகா உயர் நீதிமன்றத்தின் மாஸ்டராகவும் பணியாற்றினார். அவர் 2014 இல் ஐக்கிய இராச்சியத்தின் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். 2002 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமாணி (சிறப்பு) பட்டம் பெற்றார். 2000 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





# இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை சந்நிதி - கதிர்காமம் இடையே ஆரம்பம்!

## 815 கிலோ மீற்றர் நடைப் பயணம் சனியன்று தொடங்குகின்றது

( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய ஆடிவேல் விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காமம் நோக்கிய இலங்கையின் மிக நீண்ட பாத யாத்திரை இன்னும் இரு தினங்களில் அதாவது நாளை மறுதினம் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை ஜெயா வேல்சாமி தலைமையில் ஆரம்பமாகிறது.

அதற்கான சகல ஏற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்பட்டு பூர்த்தி அடைந்துள்ளன என பாதயாத்திரைக்குழுத் தலைவர் ஜெயா வேல்சாமி தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகல ஆகிய 7மாவட்டங்களையும் இணைத்து, 55நாள்களில் 98ஆலயங்களைத் தரிசித்து, 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப்புனித பாதயாத்திரை இலங்கையின் மிக மிக நீண்ட தூர கதிர்காம பாத யாத்திரையாகக் கருதப்படுகின்றது.

சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரைக் குழுவின் ஏற்பாட்டில் 23 ஆவது வருடமாக இப் பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .

இம்முறை பாத யாத்திரையில் கலந்து கொள்வோர் கட்டாயம் சமய ஆசார முறைப்படி கலந்து கொள்ள வேண்டும் .

21 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேஷ்டியோடும், 45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் காவி சாறியுடனும் கலந்து கொள்ள வேண்டும். செல்லும் வழியில் உள்ள ஆலயங்களில் பஜனை மற்றும் சிரமதானத்தில் பங்கு கொள்ள வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் 45 வயதுக்கு உட்பட்ட பெண்கள் எக்காரணம் கொண்டும் இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்றும், யாராவது சமய ஆசார முறைக்கு மாறான நடத்தையில் ஈடுபட்டால் இடைநடுவில் நிறுத்தப்படுவார்கள் என்றும் ஜெயாவேல்சாமி மேலும் தெரிவித்தார்.

55 நாள் நீண்ட இப் பாதயாத்திரையில் பங்கு பற்ற விரும்பும் அடியார்கள் அல்லது உதவி செய்ய விரும்பும் தனவந்தர்கள் 0778386381 அல்லது 0763084791 அல்லது 0776139932 என்ற தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப் பட்டுள்ளார்கள்.

### ஆடிவேல் விழா

கதிர்காமக் கந்தன் ஆலயம் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.








# தொடர்ந்து வெப்பமான காலநிலை நுவரெலியா மாவட்டத்தில் நீடிப்பு!

(செ.தி.பெருமாள்)

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடுமையான வெப்பமான காலநிலை நீடிக்கின்றது.

இதனால் மத்திய மலைநாட்டில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டமும் வெகுவாகக் குறைந்துள்ளது.

சிற்றாறுகள், ஓடைகள் மற்றும் அருவிகள், ஆறுகளில் நீர் வரத்து குறைந்து உள்ளது.

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள நீர் வீழ்ச்சிகள் வறண்ட நிலையில் உள்ளன. இதனால் நீர் மின் உற்பத்தி பாதிக்கும் என நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாக மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட சுமார் 52 அடி குறைந்து உள்ளது. அதே போல் காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 47 அடி குறைந்து உள்ளது.

மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து உள்ளதால் பண்டைய காலத்தில் கட்டப்பட்ட பாலம், சண்முக நாதர் ஆலயம், இஸ்லாமிய பள்ளியில் இருந்த தூபி, பௌத்த மத விகாரை, அதன் முற்றத்தில் இருந்த போதி மரம், கங்கே வத்தை நகரில் இருந்த சித்தி விநாயகர் ஆலயம் என்பனவற்றை தற்போது மக்கள் அதிக அளவில் பார்க்கச் சென்று வருகின்றமையைக் காண கூடியதாக உள்ளது.

தற்போது இப்பகுதியில் கடுமையான வறட்சியான காலநிலை காரணமாக காலை, மாலை வேளைகளில் கூட்டம் கூட்டமாக மக்கள் இப்பகுதிக்குப் படையெடுத்துச் செல்கின்றனர்.

மலையகப் பகுதிகளில் தொடரும் வறட்சியான கால நிலை காரணமாக சுத்தமான குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உள்ளது.

### மாணவியைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டு

# சரவணை அதிபருக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு தள்ளுபடி!

(ந.லோகதயாளன்)

தீவகம் சரவணை சின்னமடு றோ.க. வித்தியாலயத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் பாடசாலை மாணவி மீதான துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கில் பாடசாலை அதிபருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட பத்து வருடச் சிறைத் தண்டனையை மேன் முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்து, பாடசாலை அதிபரை நேற்று விடுதலை செய்தது.



சரவணை சின்னமடு றோ.க. வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு பாடசாலை அதிபராக இருந்த சண்முகம்பிள்ளை என்பவர் தரம் 5 சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்தார் எனத் தொடரப்பட்ட வழக்கில் 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பாடசாலை அதிபருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தார்.

இந்தத் தீர்ப்பிற்கு எதிராக எதிராளி தரப்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் சட்டத்தரணி ராஜா கொலுரே ஊடாக மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு இடம்பெற்று வந்தது.

மேல்நீதிமன்ற வழக்கு விசாரணையில் அரச சட்டவாதியால் சமர்ப்பிக்கப்பட்ட வாதங்கள் ஏற்கப்பட்டுள்ள போதும், எதிராளி தரப்பு வாதகங்கள் உரிய முறையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி, மேன்முறையீட்டை ஏற்று, மேல்நீதிமன்றத்தின் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்து, எதிராளியை விடுவித்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

# வவுனியாவில் மாமனார் சாவு; மருமகனும் நண்பரும் கைது



(கே.வசந்தன்)

வவுனியா, மதுரா நகர் பகுதியில் குடும்பஸ்தரான மாமனார் மரண மடைந்த சம்பவத்துடன் தொடர்பில் அவரது மருமகனும், நண்பரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என சிதம்பரபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை ஆசிக்குளம் கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட மதுராநகர் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் மாமனார், மருமகன் மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து மது அருந்தியுள்ளனர்.

இதன்போது மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது. இக்கைகலப்பின் போது மருமகன் மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து மண்வெட்டி, கோடரி மற்றும் தலைக்கவசங்களினால் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலினால் பலத்த காயங்களுக்குள்ளான மாமன் அவர்களிடம் இருந்து தப்பித்து ஓடி அருகில் உள்ள வீட்டின் வாசலிலே வீழ்ந்துள்ளார். வீழ்ந்து கிடந்தவரை அயலில் உள்ளவர்கள் இணைந்து வைத்திய சாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். எனினும் வைத்தியசாலையில் அனுமதிக்க முன்னரே அவர் மரணமடைந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் மதுராநகர் பகுதியைச் சேர்ந்த 45 வயதுயை கணேசமூர்த்தி (மோகன்) என்பவரே மரணமடைந்தவராவார். சம்பவ இடத்திற்கு சென்ற சிதம்பரபுரம் பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டனர். குடும்பத் தகராறினாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பில் மரணித்தவரின் மருமகன் மற்றும் அவரது நண்பர் ஆகியோரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.




# மின் கட்டண குறைப்பு முன்மொழிவுகளை 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

## மின்சார சபைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

மின் கட்டண குறைப்பு தொடர்பான முன்மொழிவுகளை நாளை 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் இலங்கை மின்சார சபை அதற்கு கால அவகாசத்தை கோரியிருந்ததாக ஆணைக்குழுவின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாளை வரை அந்த முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி முன்மொழிவுகள் கிடைத்ததன் பின்னர் மின் கட்டணங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி மின் கட்டணங்களை குறைப்பது தொடர்பான விவரங்களை எதிர்வரும் ஜூலை மாதத்தில் அறிவிக்க முடியும் என இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.




# பேராசிரியர் வித்தியானந்தனின் திருவுருவப்படம் யாழ். ஆஸ்பத்திரி அருங்காட்சியகத்தில் திறப்பு

## நேற்று அவரது நூற்றாண்டு தினத்தில்





யாழ்ப்பாண பல்கலைக கழகத்தின் முதலாவது துணைவேந்தரும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பிதாமகருமான பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு யாழ் போதனா வைத்தியசாலையின் அருங்காட்சியகத்தில் அவரது திருவுருவப்படம் நேற்று மாலை யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்தி மற்றும் அவரது பிள்ளைகளால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

கடந்த 1924 மே மாதம் 8 ஆம் திகதி பிறந்த பேராசிரியர் வித்தியானந்தன் 1989 ஜனவரி 22 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

நேற்றைய நிகழ்வில் யாழ் போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி, அகில இலங்கை இந்து மா மன்றத்தின் உப தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ் பல்கலைக்கழகத்தின் கலைபீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம், யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னால் தமிழ்துறை தலைவர் வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பல்கலைக்கழகத்தின் மருத்துவ மருத்துவபீட பீடாதிபதி வைத்தியர் ஆர். சுரேந்திரகுமரன், யாழ் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்கள், யாழ் போதனா வைத்திய சாலையின் வைத்தியர்கள், பணியாளர்கள், அன்னாரின் குடும்ப உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# டிக்கோயா வனராஜா தோட்டத்தில் இறந்த நிலையில் சிறுத்தை மீட்பு

(செ.தி.பெருமாள்)

ஹட்டன் பொலிஸ் பிரிவில் உள்ள டிக்கோயா வனராஜா தோட்டத்தில் இறந்த நிலையில் சிறுத்தை ஒன்றின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

வனராஜா தோட்ட குடியிருப்பு பகுதிகளில் உள்ள மாணாப்புல் பற்றையில் சுமார் 2 அடி நீளம் ஒரு அடி உயரம் கொண்ட சிறுத்தை இறந்த நிலையில் உள்ளதைக் கண்ட தோட்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திடம் அது பற்றி தெரிவித்தனர்.

தோட்ட நிர்வாகி இது குறித்து ஹட்டன் பொலிஸாருக்கு அறிவித்தமையைத் தொடர்ந்து ஹட்டன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து இறந்த நிலையில் இருந்த சிறுத்தையை பார்வையிட்ட பின்னர் இது குறித்து நல்லதண்ணி வன ஜீவராசிகள் அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

சம்பவ இடத்திற்கு வன பாதுகாப்பு அதிகாரிகள் சென்று இறந்த நிலையில் இருந்த சிறுத்தையை மீட்டு ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.05.2024




இன்று மகிழ்ச்சிகரமாக நாளாக இருக்கும். உங்கள் செயல்களை கவனமாக ஆற்றுவீர்கள். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை சில கொள்கைகளுடன் ஆற்றுவீர்கள். உங்கள் செயல்திறன் நிரூபணமாகி வளர்ச்சி கிடைக்கும். உங்களுக்கு பாராட்டு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் திருப்தி உண்டாகி உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். பணத்தை சேமிக்கும் வாய்ப்பு கிடைக்கும். பயனுள்ள தின்ட்டங்களில் முதலீடு செய்வீர்கள்.




இன்று தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகள் இன்று கடினமாக காணப்படும். சகபணியாளர்களின் எதிர்ப்பு உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

இன்று உங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே சூடான விவாதங்கள் ஏற்படலாம். நட்புடன் இருப்பது நல்லது.

நிதி வளர்ச்சியில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். முடிந்த அளவு சேமிக்க வேண்டும். தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்குக் கவலையை உண்டாக்கும்.

பாதுகாப்பற்ற நிலை காரணமாக தலைவலி உயரமுத்தம் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாவீர்கள்.




உங்கள் அணுகுமுறையில் சிறிது கவனம் தேவை. உங்கள் பிரியமானவர்களுடன் பேசும் போது கவனமாகப் பேசவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்கவும். இதனால் நல்லுறவை உருவாக்க முடியும்.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

சளி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.




இன்று காணப்படும் பதட்டத்தை சமாளிக்க சமநிலையான அணுகுமுறை தேவை. திருப்தியான மன நிலை ஏற்பட மனதை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறிது கடினமாக காணப்படும். சகபணியாளர்கள் ஆதரவு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அவர்களோடு நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

உங்கள் மனதில் ஏதோ இழந்தது போல உணர்வீர்கள். உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று அதிக பண வரவு காணப்படாது. அப்படியே வந்தாலும் தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள்.

இன்று இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளலாம்.




வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஒரு உரையாடலை தொடங்குமுன் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும். விட்டுக்கொடுக்கும் அணுகுமுறை தேவை. சிறிய விஷயங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

உங்கள் பணகளை சாமார்த்தியமாக அற்ற வேண்டும். இல்லையெனில் பணியில் தரத்தை விட்டுக்கொடுக்க நேரும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று மகிழ்ச்சியான நாளாக காணப்படாது. என்றாலும் பொறுமை நன்மை தரும். எதையோ இழந்தது போன்ற உணர்வு உங்கள் மனதில் ஏற்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது சில தடைகளை எதிர் கொள்வீர்கள். உங்கள் பணிகளை முறையாக திட்டமிடுவது இன்று மிகவும் அவசியம்.

மகிழ்ச்சியை தக்க வைக்க இன்று நீங்கள் உங்கள் துணையுடன் சகஜமாகப் பழக வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். நிதிநிலை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். திட்டமிடுவது அவசியம்.

தேவையற்ற குழப்பங்கள் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.ஓய்வாக அமைதியாக இருப்பது நல்லது.




இன்று சிறப்பான நாள். உங்கள் சுய முயற்சி மூலம் வளர்வீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதியின் காரணமாக உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பிறருடன் சிறப்பாக தொடர்பு கொள்வீர்கள்.

பணி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை திறமையாகக் கையாள்வீர்கள். நீங்கள் முறையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாகவும் உண்மையாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

இன்று வருமானம் அதிகமாகக் காணப்படும். சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வு காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று திருப்தியான நாளாக இருக்கும்.

உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். ஆடு உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை இரிக்கும். உங்கள் உள்ளிருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிபடுத்துவீர்கள். இந்தப் போக்கின் காரணமாக காரணமாக உங்கள் மீதான மதிப்பு உயரும்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். இன்று அதிக பணம் சேமிக்கும் வாய்ப்பு உள்ளது. இதனால் திருப்தியான உணர்வு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.05.2024




ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்டல், இறைவழிபாடு போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் இன்று ஆறுதல் கிடைக்கும். உங்கள் பேச்சில் கவனம் தேவை. இன்று நண்பர்களை சந்திப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக இன்றைய பணிகள் தள்ளிப் போகும். குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க புத்திசாலித்தனமாக பணிகளை ஆற்ற வேண்டும்.

இன்று நீங்கள் விரும்பும் மகிழ்ச்சி கிடைக்காது. உங்களின் மாறுபடும் மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது இருவருக்கும் இடையிலான உறவை பாதிக்கும் என்பதால் இதனை தவிர்த்தல் நல்லது.

பயணத்தின்போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.




இன்று எளிய பணிகளைச் செய்வது கூட கடினமாக உணர்வீர்கள். உங்கள் ஆற்றல் இழந்து காணப்படுவீர்கள். இதனால் விளைவுகளில் பாதிப்பு ஏற்படும். ஓய்வாக இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில அபாயங்களை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உருவாக்கும் பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது எச்சரிக்கை தேவை. உறவின் நல்லிணக்கம் பாதிக்கும் வகையில் சில தேவையற்ற பேச்சுக்கள் ஏற்படலாம்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று நீங்கள் பணம் இழக்க நேரலாம்.

தொண்டை வலியால் அவதிப்படுவீர்கள். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று சமநிலையோடு காணப்படுவீர்கள். இன்று புதிய தொடர்புகள் மற்றும் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். பிறருடன் கலந்து பேசி மகிழ்வீர்கள்.

கடினமான பணிகளிக் கூட எளிதாகச் செய்வீர்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உண்மையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் இருவருக்கும் இடையே நல்லுறவு காணப்படும்.

உங்கள் நிதிநிலை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். நீங்கள் மிகுந்த முயற்சி செய்து அதில் வெற்றியும் காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி இன்றைய நாளை சிறப்பாக ஆக்குவீர்கள்.

உங்கள் சமயோசித புத்தி இன்றைய பணிகளை எளிதாக்கும். வெற்றி பெற வேண்டும் என்ற உங்கள் மனநிலை உங்கள் பணியில் பிரதிபலிக்கும்.

உங்கள் துணையிடம் உண்மையாக இருப்பீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

நிதிநிலையில் இன்று வளர்ச்சி காணப்படும். லாபகரமான திட்டத்தில் இன்று நீங்கள் பணத்தை முதலீடு செய்யலாம்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# வவுனியாவில் விசேட அதிரடிப் படையால் ஐந்து கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது





**(கே.வசந்தன்)**

வவுனியாவில் 5 கிலோ கிராம் கஞ்சாவுடன் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, புளியங்குளம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு திடீர் சோதனை ஒன்றை நடத்திய அதிரடிப் படையினர் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை பரிசோதனை செய்ததில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ 124 கிராம் உடைய கஞ்சா போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

வவுனியா, செக்கட்டிப்புலவு பகுதியை சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்ட நபராவார். கைது செய்யப்பட்ட நபரை விசேட அதிரடிப் படையினர் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செயப்பட்ட நபரை வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



### இளைஞர் மீது தாக்குதல்:

# பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு மே மாதம் 15 வரையில் விளக்கமறியல்

அநுராதபுரம் – மதவாச்சியில் 23 வயதான இளைஞர் ஒருவரின் ஆணுறுப்பு பாதிக்கப்படும் அளவிற்கு தாக்குதல் நடத்தினர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மதவாச்சி பொலிஸ் நிலைய ஊழல் தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு மதவாச்சி நீதவான் நிமேஷா தர்மதாஸ முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் மூவர் கைது செய்யப்படவுள்ளனர் என குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

சந்தேகநபரான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிர்வரும் 15 ஆம் திகதி அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மதவாச்சி பொலிஸ் நிலைய வாகன போக்குவரத்து பிரிவில் சேவையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் இருவரை ஏதேனும் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுவிக்குமாறு அவர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையை நிராகரித்த நீதவான், இருவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# இலங்கை அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக இந்திய அமுல்

இருபதுக்கு 20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் உத்தியோகபூர்வ அனுசரணை இந்தியாவின் அமுல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான இருபதுக்கு 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜுன் மாதம் 2 ஆம் திகதி முதல் அமெரிக்கா, மேற்கிந்தியதீவுகளில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் இலங்கை அணி டி குழுவில் போட்டியிடுகிறது. பங்களாதேஷ், நேபாளம், நெதர்லாந்து, தென்னாபிரிக்க அணிகள் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள ஏனைய அணிகளாகும்.

தொடரில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் எதிர்வரும் ஜுன் மாதம் 3 ஆம் திகதி தென்னாபிரிக்காவை எதிர்கொள்கின்றது.

## வவுனியாவை சேர்ந்த கைதி கொழும்பில் உண்ணாவிரதம்

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் கைதி ஒருவர் கடந்த இரண்டு நாள்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வவுனியாவை சேர்ந்த கைதி ஒருவரே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார் என சிறைச்சாலைகள் பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சந்தேகநபருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நபர், 10 வருடங்களுக்கு முன்னர் சிறைத் தண்டனை அனுபவித்து வந்தவரெனவும் சிறைச்சாலைகள் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், விடுதலைப்புலிகள் அமைப்பை மீளுருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், அவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார் சிறைச்சாலைகள் பேச்சாளர் காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளியும், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவருமான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் (அரவிந்தன்) என்பவரே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார் எனச் செய்திகள் ஏற்கனவே வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

## மன்ன ரமேஷின் வீட்டில் இருந்து கைக்குண்டு கைப்பற்றப்பட்டது



திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர் எனக் கருதப்படும் மன்ன ரமேஷின் வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் அவரது வீட்டில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது இவை கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்ன ரமேஷ் தற்போது கைது செய்யப்பட்டு 72 மணித்தியாலங்கள் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தினரால் டுபாயில் நேற்று முன்தினம் அதிகாலை அவர் கைது செய்யப்பட்டு நாட்டிற்கு அழைத்துவரப்பட்டார்.

32 வயதான மன்ன ரமேஷ், அவிசாவளை யாலகம, நப்பாவலயை சேர்ந்தவராவார்.

கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

## கோரிக்கைகளுக்கு தீர்வு கிட்டாவிடின் பணிப்பகிஷ்கரிப்பு தீவிரப்படுத்தப்படும்

### பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று ஏழாவது நாளாகவும் தொடர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

பணிப்பகிஷ்கரிப்ப காரணமாக 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிடின் பணிப்பகிஷ்கரிப்பை மேலும் தீவிரப்படுத்தவுள்ளனர் எனப் பல்கலைக்கழக தொழிற்சங்க ஒன்றியத்தின் இணைத் தலைவர் தம்மிக எஸ்.பிரியந்த தெரிவித்துள்ளார்.